## சுத்தஸத்வம் அண்ணன்
## வாழி திருநாமம்

மாசி எழில் சோதி தன்னில் வந்துதித்தான் வாழியே
மணவாள மாமுனியை வாழ்த்துமவன் வாழியே
பேசரிய புகழுடைய பெருந்தவத்தோன் வாழியே
பேதைமை தீர்த்து எனையாளும் பேருடையோன் வாழியே
காசினியோர்க்கு இதம் அருளும் கௌசிகர் கோன் வாழியே
கந்தாடை அண்ணன் அடி கருதுமவன் வாழியே
வாசியுடை வரந்தருவார் திருமகனார் வாழியே
வண்ணமணி மேக நிகர் அண்ணன் என்றும் வாழியே

---